*கவனிக்க .- 07.06.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1815 - 2013 ජූනි මස 14 වැනි සිකුරාදා - 2013.06.14

*1815 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 14ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி III - காணிகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கீழ் மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்ரகமுவ மாகாணம் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கீழ் மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்ரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 154 |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- (i) *கலாநிதி மாலினி பொன்சேகா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2011, மே மாதம் 06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(ii) *தகவல் சுதந்திரம் சட்டமூலம் 2011,மே மாதம் 13 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2013, யூலை மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, யூன் மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/34945
மாகாண காணி ஆணையாளரின்
இல. : ப.இ.கொ./6/கொ/298

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

கொழும்பு மாவட்டம், கடுவெல பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நவகமுவ மேற்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த நவகமுவ கிராமத்தில் மு.பி.கொ.6612 எனும் வரைபடத்தில் அமைந்துள்ளதும் காணித்துண்டு இலக்கம்17 பகுதி எனக் காட்டப்பட்டுள்ளதுமான 0.0540 ஏக்கர் விஸ்தீரணமுள்ள அரச காணித்தொகுதியை மத நடவடிக்கைகளுக்காக ஸ்ரீ சத்தர்ம நிகேதனாராமய பொறுப்பாளர் சபையின் ஹேய்யன்துடுவகே லசந்த குஷான் அவர்கள், சுதுவாதேவகே சுமித் நிஷாந்த திசாநாயக்க அவர்கள், சுசந்த அமரசூரிய அவர்கள் என்பவர்களினால் குத்தகைக்கு தருமாறு கேட்டு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என இத்தால் அறியத் தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : டி. அலோசிங்ஞோ மற்றும் பி.ஜி. மெதியஸ் சிங்ஞோ உரிமை கோறும் ஹெடம்பகாவத்த மற்றும் 11ஆவது துண்டு ;
கிழக்கு : 16 மற்றும் 18 துண்டு;
தெற்கு : ஏ.ஹெனோஹாமி உரிமை கோறும் ஹெடம்பகாவத்த;
மேற்கு : டி. அலோசிங்ஞோ உரிமை கொறும் கெடம்பகாவத்த.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (2012.10.19 தொடக்கம் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை.**- பிரதம மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 2012 ஆம் வருடத்திற்கான காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 1/2 % ஆகும்;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி மத நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக் குத்தகை கட்டுப்படும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(ஊ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

டப்.டீ. சேபாளிக்கா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத்த மெதுர",
காணி செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2013.05.23

6-322

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/27927
மாகாண காணி ஆணையாளரின்
இல. : சீபீசீ/எல்சி/ஏஎல்டீ/4/1/35/42

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

நுவரெலியா மாவட்டம், ஹந்துரன்கெத பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ரிகில்லகஸ்கட கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ரிகில்லகஸ்கட எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் என்யு/யுடீஎச்/93/358 சுவடு வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 13 எனக் காட்டப்பட்டுள்ளதும் 0.015 ஹெக்டேயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டுத் திருமதி ஹிட்டிகே முதியன்சேலாகே உதேனி மஞ்சுளா சமரகோன் என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : குமாரகே வத்த;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 14;
தெற்கு: பிரதான பாதைக்கான ஒதுக்கு;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 12 மற்றும் குமாரகே வத்த.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது .

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (1995-06-15 தொடக்கம் முன்னோக்கி) ;

***வருடாந்தக் குத்தகை.***- பிரதம மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 1995 ஆம் வருடத்திற்கான காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இக் குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும். ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப்பணம் முடிந்த 5 வருடங்களின் இறுதியில் கொடுக்கப்பட்ட தொகையிலும் பார்க்க 50% குறையாமல் இருத்தல் வேண்டும். ;

*தண்டப் பணம்:*-காணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுமதியின் மும்மடங்காக செலுத்தப்படல் வேண்டும்;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக் குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2012.04.03 ஆந் திகதி தொடக்கம் 05 வருடங்கள் முடியும் வரையிலும் குடும்பத்தினுள் கைமாற்றம் செய்தல் அல்லது இந்தக் குத்தகையை பெற்றுக்கொண்ட நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கான கீழ்க் குத்தகை அல்லது கைமாற்றம் தவிர்ந்த, வேறு கீழ்க்குத்தகைக்கு வழங்குதல் அல்லது கைமாற்றம் செய்தல் அனுமதிக்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

(ஐ) வீட்டினைக் கட்டுவதற்காக காணி பராதீனப்படுத்தும் போது குறிக்கப்படுகின்ற காலவரையறைக்குள் வீட்டு வேலைகள் பூரணப்படுத்தப்படவேண்டும். அவ்வாறு பூரணப்படுத்தப்படாத போது நீண்ட காலக் குத்தகை இரத்து செய்யப்பட்டதாகக் கணிக்கப்படுவதுடன் அரசின் பேரிற்கு மீண்டும் காணி உரிமை மாற்றம் செய்யப்படும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

சத்துர சமரசிங்க ,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
''மிஹிகத்த மெதுர'',
காணி செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2013.05.28

6-319

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/30924
மாகாண காணி ஆணையாளரின்
இல. : அநு/11/4/2/07/22

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

குருநாகல் மாவட்டம், கிரிபாவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஒருகளை கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ராஜாங்கனய வம் வரம்பு பரப்பு 01 கிராமத்தில் பீ. பியசேன குடியேற்ற அலுவலர் திட்ட வரைபடம் கா.துஇல.03 எனக் காட்டப்பட்டுள்ளதுமான 20 பர்ச்சர்ஸ் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வதிவிடம் அமைக்கும் நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டுத் திரு. ஆர்.எம்.சந்திரா நவரத்ன என்பவரால் விண்ணப்பிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : சந்திரா நவரத்னவின் எஞ்சிய காணி;
கிழக்கு : வீதி ஒதுக்கீடு;
தெற்கு : சிட்டம்மாவின் காணி;
மேற்கு : வீதி ஒதுக்கீடு.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (1995.06.15 தொடக்கம் முன்னோக்கி) ;

***வருடாந்தக் குத்தகை.***- பிரதம மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 1995ஆம் வருடத்திற்கான காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். ;

*தண்டப் பணம்:*-காணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுமதியின் 4% இன் மும்மடங்கு தொகை தண்டப் பணமாக செலுத்தப்படல் வேண்டும்;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வதிவிட நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக் குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(எ) 2012.12.18 தினத்திலிருந்து குறைந்தது 05 வருடங்களாகிலும்

முடியும் வரை உப குத்தகை அனுமதிக்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

(ஐ) வீட்டினைக் கட்டுவதற்காக காணி பராதீனப்படுத்தும் போது குறிக்கப்படுகின்ற காலவரையறைக்குள் வீட்டு வேலைகள் பூரணப்படுத்தப்படவேண்டும். அவ்வாறு பூரணப்படுத் தப்படாத போது நீண்ட காலக் குத்தகை இரத்து செய்யப்பட்டதாகக் கணிக்கப்படுவதுடன் அரசின் பேரிற்கு மீண்டும் காணி உரிமை மாற்றம் செய்யப்படும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

டப். டி. சேபாளிக்கா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
''மிஹிகத்த மெதுர'',
காணி செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2013.05.15

6-170

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/26796(1)
மாகாண காணி ஆணையாளரின்
இல. : அநு/11/4/2/07/22

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

குருநாகல் மாவட்டம், கிரிபாவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல.14, மஹசென்புர கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ராஜாங்கனைய வம் வரம்பு பரப்பு 01 கிராமத்தில் பீ.பியசேன திட்ட வரைபடத்தில் கா.து.இல.03 எனக் காட்டப்பட்டுள்ளதுமான 20 பேர்ச் சர்ஸ் பிரமாண அரச காணியை வதிவிட நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டுத் திரு. ஆர். குணதாச என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:
வடக்கு : ஆர்.ஏ.எஸ். குரப்புவின் காணி;
கிழக்கு : வீதி ஒதுக்கீடு;
தெற்கு : ஆர். குணதாசவின் காணி;
மேற்கு : வீதி ஒதுக்கீடு.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (1995.06.15 தொடக்கம் முன்னோக்கி) ;

***வருடாந்தக் குத்தகை.***- பிரதம மதிப்பீட்டாளரினால் மதிப் பீடு செய்யப்பட்ட 1995ஆம் வருடத்திற்கான காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். ;

தண்டப் பணம்:- காணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுமதியின் 4%தின் மும்மடங்கு தொகை தண்டப் பணமாக செலுத்தப்படல் வேண்டும்;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வதிவிட நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக் குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக் குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(எ) 2012.12.18 தினத்திலிருந்து குறைந்தது 05 வருடங்களாகிலும் முடியும் வரை உப குத்தகை அனுமதிக்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

(ஐ) வீட்டினைக் கட்டுவதற்காக காணி பராதீனப்படுத்தும் போது குறிக்கப்படுகின்ற காலவரையறைக்குள் வீட்டு வேலைகள் பூரணப்படுத்தப்படவேண்டும். அவ்வாறு பூரணப்படுத் தப்படாத போது நீண்ட காலக் குத்தகை இரத்து செய்யப்பட்டதாகக் கணிக்கப்படுவதுடன் அரசின் பேரிற்கு மீண்டும் காணி உரிமை மாற்றம் செய்யப்படும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

டப்.டி. சேபாளிக்கா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
''மிஹிகத்த மெதுர'',
காணி செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.
2013.05.16

6-171

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.